## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தினதும் (''பணியகம்''), அதன் துணைக் கம்பனியினதும் (''தொகுதி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணியகத்தினதும், தொகுதியினதும் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பணியகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பணியகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளின் செயற்பாட்டு கிரயத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் மீளாய்வாண்டின் நிர்வாக செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் அதன் ஒப்பீட்டு ரீதியான பெறுமதி குறிப்பு இலக்கம் 21ஏ, 21பீ, 21சீ மற்றும் 22 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. | ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் வகைப்படுத்துவதற்கான காரணம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் வகைப்படுத்துவதற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 10,195,572 ஆன முன்னைய காலப் பகுதியின் சீராக்கம் நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட ரீதியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முன்னைய காலப் பகுதியின் சீராக்கங்கள் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முன்னைய காலப் பகுதியின் சீராக்கங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கிரயம் ரூபா 749,442,316 ஆன தொகுதியின் நிலையான சொத்துக்களில் 4,222 விடயங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பொருண்மையான பெறுமதியுடைய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது, தற்போது நாட்டில் காணப்படுகின்ற ஆதனங்களின் பெறுமதியில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பெறுமதி, கிரயங்களுடன் இணக்கம் செய்யும் போது அசாதாரண பெறுமதியை எடுக்கின்றது. அவ்வாறான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதனால் நிதிக்கூற்றுக்களில் உள்ளபடியான நிதி நிலைமை வெளிப்படுவதில்லை. | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 39(அ) பந்தியின் பிரகாரம் அரசிறை வருமானத்தை இனங்காண்பதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | அரசிறை வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது. | வருமானங்களைக் கணக்கு வைக்கும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 14 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினருக்குச் | தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்தப்பட்ட ஊதியம் மற்றும் ஏனைய படிகள் | தொடர்புடைய தரப்பினருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்ட ஊதியம் மற்றும் ஏனைய படிகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 15 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பாதீட்டின் பெறுமதி மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே இணக்கம் ஒன்றை உள்ளடக்கி அல்லது பாதீட்டின் பெறுமதி மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையிலான பொருண்மையான வேறுபாடுகளுக்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதீடு மற்றும் உள்ளபடியான பெறுமதி மாதாந்தம் அமைச்சில் நடைபெறுகின்ற முகாமைத்துவ சபையிற்கு பணியகத்தின் முகாமைத்துவ சபைக்கு அவர்களின் கவனத்திற்கும் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பாதீடு செய்யப்பட்ட பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிட்டக்கோட்டை பணியக வளவில் புதிய ஆய்வுகூடக் கட்டிடம் நிர்மாணித்தல் 2022 யூலை 28 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதற்குரிய ரூபா 408,858,451 ஆன கிரயம் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் கட்டிட பெறுமானத் தேய்வு ரூபா 8,466,636 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பணியகத்தின் இடவசதிகள் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் புதிய ஆய்வுகூடக் கட்டிடத்தை பயன்படுத்துகின்ற போதிலும் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் வழங்க வேண்டிய சான்றிதழ் கட்டிடத் திணைக்களத்திற்கு இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்த சொத்தக்கள் பணியகத்தின் சொத்தொன்றாக குறிப்பிடப்படவில்லை. | ஆய்வுகூடக் கட்டிடம் குறித்துரைத்த பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன் காலப்பகுதிக்குரிய பெறுமானத் தேய்வு சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,309,812 ஆன போக்குவரத்து, உபசரிப்பு, பிரயாணச் செலவினங்களும், பரிசோதனைக் கட்டணம் போன்ற மீண்டெழும் செலவினங்களும் பணியகத்தின் குருநாகல் மாவட்ட அலுவலகத்தை | அந்த கணக்கிற்கு ரூபா 44,619 உபசரிப்புச் செலவினம், போக்குவரத்துச் செலவினம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை அந்தக் கணக்கிலிருந்து நீக்குவதற்கும், மூலதன | மீண்டெழும் செலவினம் நடைமுறை வேலைக் கணக்கிலிருந்து அகற்றப்படல் வேண்டும். எரிபொருள் தாங்கி |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட ஆலோசனைக் கட்டணம் ரூபா 210,000 தொகையும், பணியகத்தின் பிரதான அலுவலகத்தில் எரிபொருள் தாங்கி ஸ்தாபிப்பதற்கு செலவிடப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 1,500,256 தொகையும் புதிய ஆய்வுகூடக் கட்டிடத்திற்குரிய நடைமுறை வேலையான வேலைக் கணக்கில் உள்ளடக்கப் பட்டதன் காரணமாக நடைமுறை வேலை அதிகரித்தும் மற்றும் இலாபம் அப்பெறுமானத்தால் குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | செலவினங்களை சரிசெய்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஸ்தாபிக்கும் செலவினம் இயந்திர உபகரணக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும். |
| (இ) | கட்டிடப் பொருட்கள், கைத்தொழில் வணிகங்களுக்கான அரசிறை குறித்துரைத்த பிரகாரம் செலுத்தாதிருப்பதற்குரிய தண்டப்பணம் முறையே ரூபா 15,768,351 மற்றும் ரூபா 970,482 பிழையாக அரசிறை வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அகழ்வு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் திட்ட முறைமையொன்றை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கும் மற்றும் அரசிறை பணம் மற்றும் தண்டப்பணத்தை தனியாக சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசிறை வருமானம் மற்றும் தண்டப்பணம் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | வங்கிக் கணக்கிற்கு நேரடி செலவு வைத்தல் ரூபா 2,239,912 தொகையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் செலுத்த வேண்டிய கணக்கிற்கு மாற்றப்பட்டு நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நேரடியாக வங்கி வைப்பாக ரூபா 2,239,912 தொகை சேவை நலனாளிகள் பணியகத்திற்கு மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த சேவை நலனாளிகள் அனுமதிப் பத்திரிம் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நேரடி செலவு வைத்தல்களை தாமதமாக இனங்காண்பதற்கும், உரிய பிரகாரம் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை.

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஏனைய செலுத்த வேண்டிய முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போக்குவரத்து, அகழ்வு மற்றும் ஆய்வு அனுமதிப்பத்திரத்திற்காக பெறப்பட்ட முற்பணம் | 211,368,988 | விரிவான பட்டோலை மற்றும் காலப் பகுப்பாய்வு | விரிவான பட்டோலை அல்லது காலப் பகுப்பாய்வு எதிர்பாலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரிவான பட்டோலை மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணியகத்தின் துணைக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியால் பணியத்திற்குச் செலுத்த வேண்டிய மற்றும் பணியகத்திலிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதிகள் முறையே ரூபா 44,351,804 மற்றும் ரூபா 1,545,522 ஆகும். பணியகத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பணியகத்திற்கு துணைக் கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் பணியகத்திலிருந்து கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதிகள் முறையே ரூபா 71,711,804 மற்றும் ரூபா 9,142,975 ஆகும். அதன் பிரகாரம் முறையே ரூபா 27,360,000 மற்றும் ரூபா 7,597,453 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. | பணியகத்தின் துணைக் கம்பனி மற்றும் பணியகத்திற்கிடையே, உள்ளகக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எழுந்திருந்த செலவினங்கள் மற்றும் வருமானங்கள் சரியாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் துணைக் கம்பனியால் கோரப்பட்டுள்ள ரூபா 27,360,000 இற்காக எழுத்துமூல அங்கீகாரம் கிடைக்காமையினால் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் தீர்த்துவைக்கப்படும். | உள்ளக நிறுவன கொடுக்கல் வாங்கல்களுக்கிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை இணக்கம் செய்து சரிசெய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் 23 வழங்குநர் நிறுவனங்களுக்கு ரூபா 2,764,918 கொள்வனவு முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதியில் 2015 - | பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக 23 நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணத் தொகைகளுக்கிடையே சில | கொள்வனவு முற்பணம் தாமதமின்றி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2020 காலப் பகுதியில் செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 1,074,490 ஆக இருந்தது. பெறுகைகள் பூர்த்தி செய்யப்பட்டு அந்த முற்பணத்தைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களின் முற்பணங்கள் தற்போது தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. மிகுதி முற்பணக் கொடுப்பனவுகளும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் கண்டறிந்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதிகளின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 38,533,958 கூட்டுத்தொகையான சேவையில் ஈடுபட்டிருக்காத 171 ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட அட்டுறு ஊக்குவிப்புப் படி மற்றும் 2014 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையும் ஊக்குவிப்புப் படிக்காக மிகை ஒதுக்கீட்டு மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தில் வேையிலிருந்து விலகிய அல்லது மரணமடைந்த ஊழியர்கள் அல்லது ஒழுக்காற்று பரிசோதனைகளுக்கு உட்பட்ட ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட இந்த ஊக்குவிப்புப் படி தொடர்பாக பணியகத்தின் முகாமைக்கு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் போது உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | செலுத்த வேண்டிய ஊக்குவிப்புப் படிக்காக உரித்து கோரப்படாதிருக்குமாயின் அந்த மீதி முடிவுறுத்தப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் சட்டம் | | | |
| (i) | 12(ஆ) பிரிவு | இலங்கை கனிப்பொருள் வளங்களை இனங்காணல் மற்றும் அவற்றை மதிப்பீடு | கனிப்பொருள் அமைந்துள்ள இடங்களை வரைபடமாக்குதல் பணியகத்தின் மூலம் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கனிய வளங்களை இனங்காணல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன் மாகாணங்களுக்கு இடையிலான கனிப்பொருள் வரைபடங்களை தயாரித்து அதனை பணியகத்தின் நூலகத்திலிருந்து கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கனிப்பொருளை மதிப்பிடுவதற்காக துளையிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் அதற்கு கணிசமான தொகையொன்றை செலவிடுவதற்கு ஏற்படும். எனினும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த எப்படைட் என்ற படிவுகளில் மதிப்பீடுகள் பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மற்றும் மதிப்பிடுதல் பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | 12(உ) பிரிவு | கனியங்களுக்கான பெறுமதியை சேர்ப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய படிமுறைகள் பணியகத்தினால் அறிமுகப்படுத்தப்படாமையின் காரணமாக அகழப்படுகின்ற காரியம், கனிய மணல் மற்றும் பளிங்கு போன்ற கனிப்பொருட்களுக்காக பெறுமதி சேர்க்காமல் மூலப் பொருளாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. | தொடர்ந்தும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் லங்கா கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் மூலம் மாத்திரம் கனிய மணல் மூலப் பொருளாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஏனைய கனிப்பொருட்களுக்காக பெறுமதி சேர்க்கும் அளவுகோல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | கனிப்பொருட்களுக்காக பெறுமதிகளை சேர்ப்பதற்காக பயன்படுத்த வேண்டிய படிமுறைகள் பணியகத்தால் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (iii) | 28(1) பிரிவு | கருங்கல்லுக்கான போக்குவரத்து | கருங்கல் போக்குவரத்துக்கு | கருங்கல் போக்குவரத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதால் கருங்கற்களின் சந்தை விலை விரைவாக உயர்வடைந்து சென்றிருந்தது. மேலும் அதற்காக ஊழியர்களை ஈடுபடுத்துதல் போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை பரீட்சித்தல் போன்ற மேலதிக நிருவாக செலவினங்களையும் பணியகத்திற்கு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. | அனுமதிப் பத்திரத்தை அறிமுகப்படுத்துவத ற்கோ அல்லது சட்டத்தினை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 44(இ) பிரிவு | சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் மூலம் அனுமதி வழங்கப் பட்டுள்ள ஆய்வு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அந்த செயற்பாடுகளை நடாத்திச் செல்தல் தொடர்பாக அனுமதிப் பத்திரதாரர்களுக்கான ஈடுபடும் அதிகாரம் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது பணியகத்தின் மூலம் கட்டண அடிப்படையில் 03 அனுமதிப்பத்திரதாரர் களுக்காக ஆய்வு நடவடிக்கைகளுக்கா க தேவையான பணிகள் ரூபா 4,632,689 தொகையில் நிறைவேற்றப்பட்டிருந் தது. | பணியகத்தின் மூலம் புவியியல் ஆய்வு சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் மூலம் பணியகத்திற்கு மேலதிகமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் புவியியல் ஆய்வு தரவுகளை சரியான நியமத்துடன் பெற்றுக் கொள்ளல் அதன் நோக்கமாகும். நிறுனத்தின் மூலம் ஆய்வு அனுமதிப் பத்திரதாரர்களுக்கு நிறுவனத்தின் மூலம் ஆய்வு செயற்பாடுகளில் இலக்குகளை அடைந்து கொள்ளும் செயற்பாடுகளில் ஒரு பகுதிக்காக மாத்திரம் வழங்கப்படுகின்றது. | கனிப்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக அந்த நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ள முடியாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | 52(2) பிரிவு | அகழ்வுகளின் பின்னர் அகழ்வு நிலத்தைப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | புனரமைப்பதற்கு அனுமதிப் பத்திரதாரர்கள் நடவடிக்கை எடுக்காதிருப்பார்களாயின் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதன் போது அனுமதிப் பத்திரதாரர்கள் வைத்துள்ள வங்கி பிணை முறையை நீதிமன்ற கட்டளையின் மூலம் பணியத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு (மீண்டும் விடுவிக்கப்படாத தொகையாக) 236/04/2023 என்ற சுற்றறிக்கை மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. | கனிப்பொருள் அகழும் நிலத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதிய இலக்கம் 21/1799/301/022 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிர்மாணக் கைத்தொழில்களுக்காக பயன்படுத்தப் படுகின்ற கனிப்பொருள் அகழ்வு, போக்குவரத்து மற்றும் வியாபாரம் தொடர்பான பணிக் கோவை | புவியியல் பிரிவினால் விடுவித்தல் தேவையற்ற அல்லது அகக்குறைந்த அளவினைக் கோருவதற்கு ஏற்படுகின்ற அகழ்வு இடங்கள், விடுவிக்கக்கூடிய சில கோரிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்ற இடங்கள், விடுவிக்கும் அநேகமான கோரல்கள் மேற்கொள்ளப் படுகின்ற அகழ்வு இடங்கள் முன்னுரிமை 1, 2, 3 ஆக வகைப்படுத்தப்பட்டு அதன் கீழ் ஏடுகளைப் பேணிச் செல்லல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்க வேண்டி இருந்த போதிலும் | தற்போது உரிய வகைப்படுத்தலுக்குரிய பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டுள்ளது. | பணிக்கோவையின் பிரகாரம் முன்னுரிமை 1, 2, 3 ஆக வகைப்படுத்தப்பட்டு அதன் கீழ் ஏடுகளைப் பேணிச் செல்லல் மற்றும் அவற்றை நாளது வரையாக்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பதிவேடு பேணிச் செல்லப் பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 189 | 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையும் வியாபார கடன் பட்டோரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 2,574,468 பெறுமதியான 38 காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும் அப் பெறுமதியை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய கடன்பட்டோரிடமிருந்து அந்தப் பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 3.2 V ஆம் பந்தி | ஊக்குவிப்பும் முன்மொழிவுத் திட்டம் எவ்வேளையிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் பணியகம் அவ்வாறு அங்கீகரித்த ஊக்குவிப்புப் படி முன்மொழிவுத் திட்டம் இன்றி மீளாய்வாண்டில் ரூபா 107,000,000 ஊக்குவிப்புப் படி செலுத்தி இருந்தது. | பணியகம் ஊக்குவிப்பு படி செலுத்துவதற்காக புதிய திட்ட முறைமையொன்றைத் தயாரித்து பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த புதிய திட்ட முறைமைக்காக அங்கீகாரம் கிடைத்த பின்னர் 2023 ஆம் ஆண்டில் இருந்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஊக்குவிப்பு திட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,969,642,374 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,564,466,354 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 405,176,020 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நிர்வாக செலவினம் மற்றும் வருமான வரி செலவினம் முறையே ரூபா 571,352,480 இனாலும், ரூபா 159,270,375 இனாலும் அதிகரித்த போதிலும் செயற்பாட்டுக் கிரயம் ரூபா 159,905,428 இனால் குறைவடைந்தமை, வருமானம் மற்றும் நிதி வருமானங்கள் முறையே ரூபா 743,932,869 இனாலும், ரூபா 219,693,368 இனாலும் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்தால் எரிபொருள் தாங்கியொன்றை கொள்வனவு செய்து பணியகத்தின் வளவில் எரிபொருள் களஞ்சியப்படுத்துகின்ற நிலையமொன்றைத் தயாரிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 4,401,262 செலவிடப்பட்டிருந்ததுடன் 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் இந்த சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ரூபாய் கணக்கு திறக்கமாமையின் காரணமாக பணயகத்திற்கு நேரடியாக கூட்டுத்தாபனம் ஊடாக எரிபொருளை பெற்றுக் கொள்ளல் தாமதமடைந்திருந்தது. எனினும் தற்போது கூட்டுத்தாபனம் பணியகத்திற்கு ரூபா கணக்கு ஊடாக சாதாரண சந்தை விலையில் எண்ணெயினைக் கொள்வனவு செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளமையினால் எதிர்காலத்தின் போது பணியகம் இந்த தாங்கையை தேவையான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும். | சொத்துக்களை பயன்படுத்துதல் வேண்டும். தேவையற்ற கொள்வனவுகளிலிருந்து விலகி இருத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பணியகத்தின் பதுளை மாவட்ட அலுவலகத்திற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்திற்காக தீ காப்புறுதி மேவுகை பெறப்படாமையின் காரணமாக அந்தக் கட்டிடத்திற்கு ஏற்பட்ட தீ இழப்பினை ஈடுசெய்வதற்காக கட்டிட | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் உரிய மிகுதி நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | பொறுப்புக்களை புறக்கணித்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமையாளருக்கு 2022 மார்ச் 29 ஆம் திகதி ரூபா 2,120,713 இழப்பீடொன்று செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. பணியகத்தால் அதற்குரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கருங்கல்லிற்காக அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது பணியகத்தால் அகழ்வாளர்களிடமிருந்து பொருளாதார ஆய்வு அறிக்கை பெறவேண்டி இருந்ததுடன் கருங்கல் அகழ்வின் பின்னர் நிலத்தை சமப்படுத்துதல் பொதுவாக சராசரியான நில மட்டத்தினை விட உயர்வான மட்டத்தில் இருந்தமையால் மண் நிறைத்தல் தேவையற்றதாக இருந்தமையால் அகற்றப்பட்ட மேற்கூறப்பட்ட மண்ணை இட்டு நிலத்தை புனரமைத்ததன் பின்னர் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காகவும் மற்றும் ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளுக்காகவும் நிலத்தை பயன்படுத்தக்கூடியதாக இருந்தமை காண்பித்து வெளியிடப்பட்ட வெளியீட்டில் அவ்வாறு உள்ளடக்கப்பட்டிருந்தது. 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் 52(2) பிரிவின் பிரகாரம் அகழ்வு களின் பின்னர் நிலத்தைப் புனரமைக்கவேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில் பணியகத்தால் அகழ்வு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் போது நிலத்தைப் புனரமைப்பதற்காக வங்கி பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பணியகத்தால் அகழ்வு நிலத்தை புனரமைத்தல் தொடர்பாக புனரமைப்புத் திட்டமொன்றைப் பெற்று அந்த திட்டத்தின் பொருத்தத் தன்மையின் பிரகாரம் புனரமைப்பு பிணை முறியைப் பெற்று அகழ்வு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் திட்ட முறைமையொன்று தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | நிலத்தை புனரமைத்தல் தொடர்பாக பொருத்தமான பிரகாரம் அனுமதிப் பத்திரங்களின் நிபந்தனை அனுபவத்திறன்கள் நிபந்தனைகளை உள்ளடக்கு வதற்கும் போதியளவான பிணையினைப் பெற்றுக்கொள்வதற்கு ம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கருங்கல் அகழ்வினை மேற்கொள்ளும் போது காணப்படுகின்ற நில மட்டத்தில் உள்ளே அகழ்வு மேற்கொள்ள முடியாதிருந்தமை அகழ்வு அனுமதிப்பத்திர நிபந்தனையில் | நீர் குழிகள் காணப்பட்டமையால் ஆபத்து ஏற்படக்கூடிய அந்த நிலங்களை பரிசோதனை செய்த போது கண்டறியப்பட்ட கற்குழிகளை | அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறிய அனுமதிப்பத்திர தாரர்களுக்கு எதிராக சட்ட ரீதியான |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கருங்கல் அகழ்வும் இடங்கள் அநேகமானவற்றில் நில மட்டத்தைவிட கீழ் மட்டத்தில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்த குழிகளில் நீர் நிரம்பி இருந்ததுடன் ஆபத்து ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதிருந்தது. பணியககம் அந்தக் குழிகளை புனரமைப்பதற்கோ அல்லது அகழ்வு அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியமை தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளோ எடுத்திருக்கவில்லை. | மேவுகை செய்யும் வகையில் சீரமைப்பதற்கு அனுமதிப்பத்திரதாரர்களுக்கு அறிவிப்பதற்கும், அனுமதியற்ற நபர்கள் கற்குவாரி சுற்றாடலில் நுழையாதிருப்பதற்கும் பணியகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அகழ்வு நிலத்தைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அனுமதிப்பத்திரதாரர்களினால் புனரமைக்கப்பட்ட மற்றும் புனரமைக்கப்படாத அகழ்வு நிலத்தை இனங்காணக்கூடிய வகையில் மற்றும் பெறப்பட்டுள்ள பிணை தொடர்பான தகவல்களை காண்பிக்கின்ற பிரகாரம் தரவு முறைமையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | தரவு முறைமையில் அகழ்வு நிலங்களைப் புனரமைத்தல் மற்றும் புனரமைக்காமை தொடர்பாபான தகவல்களை வெளிப்படாத வகையில் இருந்ததுடன் பிணைகளை பெற்றுக் கொள்ளல் கோவைகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | அகழ்வு நிலங்களுக்குரிய சகல தகவல்களையும் உள்ளடக்கிய தரவு முறைமையொன்றை பேணிச் செல்லல் வேண்டும். |
| (உ) | தம்புள்ள பிரதேசத்தில் தனியார் கம்பனி ஒன்றினால் ‘‘சர்கோன் மிட்லின்’’ கனிய மணல் மெற்றிக் தொன் 416 ஏற்றுமதி செய்வதற்காக அந்த கனிப்பொருள்களில் உள்ளடங்கியுள்ள ஈரப்பதன் மட்டத்தைப் பரீட்சிப்பதற்கு இலங்கை அணுசக்தி ஒழுங்படுத்தல் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த தெரிவுகளில் காணப்பட்ட ஈரத்தன்மை சர்வதேச அணுசக்தி முகவராண்மை மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள போக்குவரத்தின் போது காணப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட ஈரப்பதனை விஞ்சி காணப்பட்டது. எனினும் கனிப் பொருட்களில் உள்ளடக்கப்பட்ட ஈரப்பதனின் உள்ளடக்கத்தைக் கவனித்திற் கொள்ளாமல் மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்துதல் சபையிலிருந்து அங்கீகாரம் | இந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தற்போது பணியகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023.03.20 ஆம் திகதிய பணிப்பாளர் நாயகத்தின் DG.Mining/In.Memo/2023/02 என்ற கடிதம் விநியோகிக்கப்பட்டுள்ளது. | இலங்கை அணுசக்தி ஒழுங்படுத்தல் சபையினால் கனிப் பொருள்களில் உள்ளடக்கப்பட்ட ஈரப்பதனின் மட்டத்தைப் பரீட்சித்து அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும். பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருடனான பரிசோதனை நடாத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளப்படாமல் இதற்காக கம்பனிக்கு 02 ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்கள் பணியகத்தினால் விநியோகிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மன்னார் தீவுகளில் கனியமணல் ஆய்வுக்காக இலங்கை பதிவு செய்த 05 கம்பனிகளும், காரியம் படிவுகளுக்கான 09 அனுமதிப்பத்திரங்கள் 04 கம்பனிகளுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்தக் கம்பனிகளால் 10 - 13 வருட காலத்திலிருந்து நீண்ட காலமாக படிவுகள் ஆய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் புதிய காரிய சுரங்கம் மற்றும் கனியமணல் பிரதேசங்கள் மீளாய்வாண்டு வரை கண்டறியப்படவில்லை. ஆய்வுகளுக்கான அனுமதிப் பத்திரம் பெற்ற அனுமதிப்பத்திரதாரர்கள் எந்தவொரு கனியப் பொருள் படிவுகளையும் கண்டறியாமல் உரிய பிரதேசங்கள் ஒதுக்கப்பட்டமையினால் கனிய படிவுகள் செயற் திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்திருக்கின்ற ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டிருந்தது. | இந்த அனுமதிப் பத்திரம் ஐந்தும் ஆய்வு நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் பணியகத்தால் உரிய இறுதி ஆய்வு அறிக்கை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் அகழ்வுக்காக பொருளாதார ரீதியாக ஆக்க பூர்வமான செயற்திட்டம் ஒன்றாக இனங்காணப்பட்டமையால் உரிய அனுமதிப் பத்திரதாரர்களுக்கு அகழ்வுக்காக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் படிவுகளை கண்டறிதல் நீடிக்கப்படவில்லை. | ஆய்வு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் அதன் செயல் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பரீட்சித்து அனுமதிப்பத்திரக் காலம் நீடிக்கப்படவேண்டியிருந்ததுடன் செயல் முன்னேற்ற அறிக்கையிடப்படாதிருக்குமாயின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படல் வேண்டும். |
| (எ) | பணியகத்தின் பொதுவான அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயற்பாடுகளுக்கு புறம்பாக கருங்கல், மண், மணல், கிரவல், களி போன்ற கனி பொருட்களை அகற்றுவதற்காக (அகழ்வுகள் அல்லாத செயற்பாடுகளின் மூலம் உருவாகின்ற கனிப் பொருட்களை அகற்றுவதற்காக விநியோகிக்கப்படுகின்ற விஷேட அனுமதிப் பத்திரம்) 1226 மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் | விஷேட அனுமதிப்பத்திரம் மிகவும் வரையறையான அளவில் மாத்திரம் விநியோகிக்கப்படுவதுடன் அதற்கான வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. | பொதுவாக அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயற்பாடுகளுக்கு புறம்பாக அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுமாயின் அதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரித்தல் குறித்துரைத்த திட்ட முறைமையொன்றை வெளியிட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சட்டத்தின் 30 மற்றும் 31 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் அதிகாரம் தொடர்பான வரையறுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் எதுவும் விநியோகிக்கப்படாதிருக்க வேண்டிய பிரதேசங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) பணியகத்தின் தொழில் வழங்களைத் திட்டமிடும் முறைமை (ERP) ஸ்தாபிப்பதற்காக 2022 நவம்பர் 17 ஆம் திகதி ரூபா 128,736 செலவினம் செய்து பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்த தெரிவு செய்யப்பட்ட ஆலோசனை நிறுவனமான மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு ரூபா 1,125,000 செலுத்தி ஆரம்ப கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைத் தயாரிப்பதற்காக ஆலோசனை சேவை பெறப்பட்டிருந்தது. இந்த கேள்வி ஆவணங்களுக்குப் பதிலாக உரிய கேள்வி ஆவணத்தை தயாரிப்பதற்கு 2023 பெப்ரவரியில் நடைபெற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக உரிய பணிகளுக்காக செலவிடப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 1,253,736 செலவினம் பயனற்றதாக இருந்தது. | ERP முறைமை ஸ்தாபிப்பதற்குரிய ஆரம்ப ஆவணங்களில் ஏதாவது விடயங்கள் தவறவிடப்பட்டிருந்தமை பின்னர் வெளிப்படுத்தப்பட்டமையால் பின்பற்றப்பட்ட பெறுகை நடைமுறைகளை தற்காலிகமாக நிறுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. தற்போது சகல பிரிவுகளினதும் விடயப் பரப்பை மேவுகை செய்து மீண்டும் தேவையான உள்ளடக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளின் பின்னர் கேள்வி ஆவணங்களைத் தயாரித்து பெறுகை நடைமுறைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கேள்வி ஆவணங்களைத் தயாரிக்கும் போதும், மதிப்பீடு செய்யும் போதும் நிறுவனத்தின் தேவையினை குறித்துரைத்த பிரகாரம் உள்ளடக்கப்பட்டிருந் ததா? என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கவனத்திற் கொண்டு பயனற்ற செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பயனற்ற செலவினங்கள் ஏற்பட்டதற்கான செயற்படுகளில் ஈடுபட்ட பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் முறையான | | |

| | | | |
|---|---|---|---|
| | புவியியல் வரைபடத்தைத் தயாரித்து கையேற்றல் மற்றும் புவியியல் வரைபடத்தைத் தயாரித்தல், இலங்கை கனிப்பொருள் வளங்களை இனங்காணல் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்தல் பணியகத்தின் பணியாகும். அதற்குரிய மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அது தொடர்பான செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | வரைபட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வில்பத்து வலயத்தில் வரைபடமிடப்பட்ட துறைசார்ந்த செயற்பாடுகளில் 75 சதவீதம் 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் நிறைவேற்ற வேண்டியதாகக் காணப்பட்ட அதற்குரிய வரைபடமாக்கும் நடவடிக்கைகளும் மண் இரசாயன வரைபட நிகழ்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகளும், கதிர்காமம் - யால மற்றும் மன்னார் - கிரிந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அணு மூலப்பொருள் ஆய்வு நடவடிக்கைகளும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | புவியியல் வரைபட நிகழ்சித் திட்டம் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது.<br>இந்த கதிர்மாம்-யால அணு மூலப்பொருள் ஆய்வுகள் பூர்த்தி செய்தலை கைவிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.<br>புவியியல் இரசாயன வரைபடமாக்கல் இலங்கையில் அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் ஆனமையால் காலம் தேவைப்படுகின்றது. | பிரயோக ரீதியான நிலைமையைக் கவனத்திற் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (ii) | இலங்கையில் புவியியல் ஆய்வு வரைபடம் வழங்கல் மற்றும் அச்சிடுதல் 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 1:50,000 அளவிடை வரைபடத்தின் கீழ் இலக்கம் 29 கற்பிட்டி வரைபடம் அச்சிடுவதற்கும் மீளாய்வாண்டில் ஏப்ரல் மாதம் வரையில் பூர்த்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்ததுடன் | இலங்கையில் புவிவியல் ஆய்வு வரைபடம் தற்போது அச்சிடப்பட்டுள்ளது.<br>கற்பிட்டி, வில்பத்து வரைபடங்கள் 2022 ஆம் ஆண்டின் போது வழங்கல்கள் பூர்த்தி செய்யப் பட்டிருந்ததுடன் அச்சிடல் நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நடைமுறை நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் இறுதியளவில் வரைபடம் வழங்கப் பட்டிருந்த போதிலும் அச்சிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (iii) | வவுனியா - திருகோணமலை இலக்கம் 6 மண்ணியல் இரசாயன வரைபடம் மீளாய்வாண்டில் மார்ச் இறுதி வரையிலும் அச்சிடுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் அச்சிடப்பட்டிருக்கவில்லை. | புவியியல் இரசாயன வரைபடமாக்கல் இலங்கையில் அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் ஆனமையால் காலம் தேவைப்படுகின்றது. | நடைமுறை நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (iv) | தென் மாகாண கனிப்பொருள் வரைபடம் வழங்கல் மற்றும் அச்சிடல் மீளாய்வாண்டின் பெப்ரவரி வரையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வழங்கல் நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | தென் மாகாண கனிப் பொருள் வரைபடம் தற்போது அச்சிடப்பட்டுள்ளது. | நடைமுறை நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (v) | கிழக்கு மாகாண கனிப்பொருள் வரைபடத்திற்காக துரைசார்ந்த கடமைகள், வரைபடம் வழங்கல் மற்றும் அச்சிடல் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் ஒக்டோபர் வரையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகள் ஆண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கிழக்கு மாகாண கனிப்பொருள் வரைபடம் 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் முன்னர் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடியின் காரணமாக 2023 ஆம் ஆண்டிற்கு காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. அவ்வாறே நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற விஞ்ஞானிகளில் கனிசமான தரப்பினர் தற்போது வேலையிலிருந்து விலகி | நடைமுறை நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வெளிநாடு சென்றமையும் புவியியல் ஆய்வு பிரிவின் மூலம் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட பணிகளும் தாமதமடைவதற்கு காரணமாக இருந்தது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக கனிப்பொருள் கைநூல் (Mineral Year Book) வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் கனிப்பொருள் கைநூல் தாமதமாகி 2023 மே 13 ஆம் திகதியின் போது வெளியிடப்பட்டிருந்தது. | வருடாந்த கனிப்பொருள் கைநூல் வெளியிடுவதற்காக பணியகத்தின் தரவுகளைக் கொண்டு கனிவளம் தொடர்பான வியாபாரங்களில் ஈடுபடுகின்றவர்களினாலும் ஏனைய அரச நிறுவனங்களினாலும் தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. எனினும் அநேகமான விடயங்களில் இந்தக் கம்பனிக்குரிய தரவுகள் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ளாமையினால் இலங்கையில் சுங்கம் போன்ற நிறுவனங்கள் இந்த தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக பணம் அறவிடுவதன் காரணமாக உரிய நேரத்தில் இந்த கனிப்பொருள் கைநூலை வெளியிடுவதற்கு முடியாதிருந்தது. | 2021 மற்றும் 2022 இன் கனிப்பொருள் கைநூல் தாமதமின்றி வெளியிடல் வேண்டும். |